செ. கு. எண்: 050 நாள் :26.07.2015

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா**

## அவர்களின் அறிக்கை – 26.7.2015

**1)** கிருஷ்ணகிரி மாவட்டம், **கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து,** வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்களில் தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுறக் கால்வாய் வாயிலாக முதல் போக பாசனத்திற்காக **27.7.2015 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கப் பாசன அமைப்பின்கீழ் உள்ள **9012 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்;

2) கிருஷ்ணகிரி மாவட்டம், **கெலவரபள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து** வலது மற்றும் இடது பிரதானக் கால்வாய் வாயிலாக முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கிருஷ்ணகிரி மாவட்டம், கெலவரபள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடது பிரதானக் கால்வாய் வாயிலாக முதல் போக பாசனத்திற்காக **27.7.2015 முதல்** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள **8,000 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**